# <u>வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு பாடம் - 4</u>

இந்த பாடங்களைப் படிப்பதனாலே, அதைக் கைக்கொண்டதினாலே, அநேகர் வெற்றியுள்ள வாழ்வில் வந்துவிட்டார்கள் என விசுவாசிக்கிறேன். உங்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கிறது. இந்த காரியங்களையெல்லாம் தேவனுடைய கண்ணோட்டத்தோடு பார்க்கிறீர்கள். தேவன் எப்படி பார்ப்பாரோ, அப்படியே பார்க்க ஆரம்பித்து விட்டீர்கள். முன்னே உங்கள் வாழ்வு தோல்வியாய் சென்றதாய் நினைத்திருப்பீர்கள். இல்லாவிட்டால் ஏன்தான் வாழ்கிறோமோ என்று நினைத்திருப்பீர்கள். ஆனால் தேவன் உங்கள் வாழ்வில் இடைப்படுகிறார், தலையிடுகிறார். எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாக நடத்துகிறார் என்றெல்லாம் நாம் இப்போது சிந்தித்து இருக்கிறோம். சகலத்தையும் நம்மைக்கேதுவாய் நடத்துகிற கர்த்தர் என் வாழ்வின் காரியங்களையும் ஜெயமாக நடத்தி அநேகருக்கு ஆசீர்வாதமாய் வைப்பார் என்ற நம்பிக்கைக்கு நீங்கள் வந்து விட்டதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். வெற்றியுள்ள வாழ்வுக்கு மூன்று படிகளை பார்த்திருக்கிறோம்.

## <u>4. தேவனோடு ஒப்புரவாகும்படி முடிவு செய்யுங்கள்:</u>

நான்காவது வழிமுறையை பார்க்க போகிறோம். தேவனோடு ஒப்புரவாகும்படி முடிவு செய்யுங்கள். திரும்ப முடிவு செய்யுங்கள். நாம் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். பவுல் எழுதிய நிருபங்களின் மையக்கருத்து இதுவாகத்தான் இருக்கிறது. ‘‘ஒப்புரவாக்கப்படுதல்’’, நாம் அதை குறித்து ஒரு வசனத்தை சொல்லி ஆரம்பிப்போமானால் மிகவும் உதவியாய் இருக்குமென்று கர்த்தருக்குள் நம்புகின்றேன். 2 கொரிந்தியர் 5:18-20 – ‘‘இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல,

நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.'' என்று வாசிக்கின்றோம்.

ஆம் பிரியமானவர்களே, இங்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை குறித்து பவுல் அழகாக எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவைக் கொண்டு பிதாவாகிய தேவன் நம்மை அவரோடு ஒப்புரவாக்கி இருக்கிறார். ஒப்புரவாக்கி இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியத்தில் நம்மை ஸ்தானாபதிகளாய் ஏற்படுத்தி, தூதர்களாய் நம்மை ஏற்ப்படுத்தி இருக்கிறார். தேவனுக்கு தூதர்களாய் இருந்து, ஸ்தானாதிபதிகளாய் இருந்து, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை பெற்று இருக்கிறதினாலே, நாம் ஸ்தானாதிபதிகளாய் இருக்கிறதினாலே மற்றவர்களை அழைக்க கிறிஸ்துவின் நிமித்தம் அழைக்கப்பட்டு இருக்கிறோம். வாருங்கள் தேவனோடு ஒப்புரவாகுங்கள். உங்களுக்கும், தேவனுக்கும் பகைமை இருக்கிறது. முன்னே பாவத்தில் இருந்தீர்கள். இப்போதும் இருக்கிறீர்கள். ஆதாம், ஏவாள் வீழ்ச்சியினாலே, பாவத்தினாலே மனுக்குலம் பாவத்தில் இருக்கிறது. உங்களுக்கும் தேவனுக்கும் இடையே பிளவு இருக்கிறது. நெருங்கி வாருங்கள், ஒப்புரவாகுங்கள், தேவனோடு சமாதானம் உடையவர்களாய் மாறுங்கள். உங்களுக்கும், தேவனுக்கும் பகைமை இருக்கிறது. அந்த பகைமை மாற ஒப்பரவாகிவிடுங்கள். அவரிடம் வந்து மன்னிப்பு கேட்டு பாவமன்னிப்பு பெற்று அவரோடுகூட இணைந்து விடுங்கள் என்ற உபதேசத்தை கர்த்தர் நம் கைகளிலே தந்து இருக்கிறார். இவ்விதமான இடத்திற்கு வர தேவன் விரும்புகிறார். நீங்கள் பாவத்தில் வாழும்போது உங்களுக்கும் தேவனுக்கும் பகைமை இருக்கிறது. மனிதர்களாகிய நம்முடைய பகையே மிகவும் மோசமானது, நாம் பழிவாங்க துடிக்கிறோம். ஆனால் தேவனோடு நாம் பகையை வைத்து வாழ முடியுமா? யோசித்து பாருங்கள். உலகில் அவரை விட்டு எதிராளியாய் நீங்களும், நானும் வாழ முடியுமா? சற்று யோசித்து பாருங்கள். ஆகவே நீங்களும், நானும் தேவனோடு ஒப்புரவாக கர்த்தர் விரும்புகிறார். தேவனோடு, கிறிஸ்துவோடு இணைந்துவிட வேண்டும் என கர்த்தர் விரும்புகிறார். அதற்கு முதலில் தேவனோடு ஒப்புரவாகும்படி முடிவு எடுங்கள். இங்குதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிவகை உண்டாகிறது.

முன்பு உங்கள் இஷ்டப்படி வாழ நினைத்தீர்கள், கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன், இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று நினைத்துக்கொண்டு இருந்தீர்கள்.

ஆனால் இன்னும் தேவனோடு ஒப்புரவாகாத நிலையிலிருந்து வருகிறீர்கள். உங்களுக்காய் வாழ்கின்ற, சுயத்திற்காய் வாழ்கின்ற வாழ்வை இதுவரை செய்து வருகிறீர்கள். ஆனால் இப்பொழுது உங்கள் சுயத்தை, தியாகம் செய்துவிட்டு கர்த்தாவே உங்கள் சித்தப்படி வாழ விரும்புகிறேன் என்று ஒப்புக்கொடுக்கிற இடத்தில் வருகிறதுதான் ஒப்புரவாகுதலின் ஊழியத்தின் உச்சகட்டம். நீங்கள் இவ்விதமாய் இணைந்து விடுங்கள். உங்கள் வாழ்வு ஜெயமாக மாறிவிடும். முன்பே நான் உங்களுக்கு சொன்னதுபோல, நீங்கள் மீட்கப்படும்போது தேவன் உங்கள் வாழ்விற்கு ஆதாரமாய் விளங்குகின்றார். தேவனே நீர் என் வாழ்வின் ஆதாரம் என்று முதலில் அவரை ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். அனால் ஒப்புரவாகும்போது, சுயத்திற்காய் வாழ்வதை விட்டுவிட்டு, கிறிஸ்துவோடு முற்றிலும் இணைகிற ஒரு இடத்திற்கு வரும்போது. ஓர் புதிய சிருஷ்டியாய் மாறுகிறீர்கள். சுபாவம் எல்லாம் மாற்றம் அடைகிறது.

முழுவதுமாய் அவருடன் இணைந்து அவருக்காய் பிழைக்கிறீர்கள். கிறிஸ்துவுக்குள் என்று அடிக்கடி வேதத்தில் பார்த்திருப்பீர்கள், இப்போது நீங்களும் கிறிஸ்துவுக்குள்ளான ஓர் வாழ்விற்கு வருகிறீர்கள். இப்போதுதான் உண்மையான விடுதலையை கிறிஸ்துவுக்குள் அனுபவிக்க ஆரம்பிக்கிறீர்கள். இவ்விதமாக நீங்கள் தேவனோடு ஒப்புரவாகி விடுவதினால் இன்னும் அதிகமான வெற்றியுள்ள வாழ்க்கைக்கு உங்கள் பயணம் துரிதமாகிறது.

## <u>5. வாழ்வை, தேவனுக்கு சரணடைய வைத்து விடுவது:</u>

ஐந்தாவதுபடி, உங்கள் வாழ்வை தேவனுக்கு சரணடைய வைத்து விடுவது. அதாவது தேவனை எஜமானாக ஏற்றுக்கொள்வது. அநேகர் தேவனை கர்த்தராக மட்டுமே ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் கர்த்தராக மட்டும் ஏற்றுக்கொண்டால் போதாது. அவரை எஜமானனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என வேதம் எதிர்பார்க்கிறது. அதற்கு நீங்கள் சரணடைவதைவிட வேறு வழியில்லை. தேவன் ஒருவரே உங்களுக்கு எஜமானனாக இருக்க தலை சாயுங்கள். தேவனிடத்தில் உங்கள் வாழ்வை சமர்ப்பித்து, அவரை ஆண்டவராக, எஜமானனாக ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

நீங்கள் தேவனை சார்ந்து அவருக்கு கீழ்படிந்து வாழ்கிறதினாலே நீங்கள் முழுமனதுடன் ஒப்புவிக்கின்ற ஓர் இடம் தான் இது. நீங்கள் அவருடன் சார்ந்து வாழ ஒப்புவிக்கிறது மிகவும் சந்தோஷமான விஷயம். இன்று பலரின் எண்ணம்

தேவனிடம் நம் வாழ்வை கொடுத்துவிட்டால் அது மிகவும் கடினமான விஷயம். வாழ்வில் அவர் விளையாடி விடுவார். அவருக்கு அடிமைப்பட்டு வாழ்வது நல்ல விஷயம் அல்ல. சந்தோஷமான விஷயம் அல்ல என அநேகர் நினைக்கின்றனர். ஆனால் அப்படி அல்ல. இதை ஆபிரகாம் லிங்கன் வாழ்வில் நடந்த ஓர் சம்பவத்தை வைத்து புரிந்து கொள்ளலாம். நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஓர் பெண்மணியை அங்கு ஏலம் விட்டுக் கொண்டு இருந்தார்கள். அன்றைய காலகட்டத்தில் அமெரிக்காவில் அடிமை வியாபாரம் இருந்தது. அப்போது ஓர் பெண்மணி அடிமையாக விற்க்கப்பட்டாள். ஏலம் விடப்பட்டது. அநேகர் ஏலம் கேட்டார்கள் அந்த வேளை ஆபிரகாம் லிங்கன் அங்கே வந்தார். இதைப் பார்த்த அவர் அந்த பெண்மணிக்கு உதவ வேண்டும் என்று மிக அதிக பணம் கொடுத்து வாங்கிவிட்டார். ஏலத்தின் பின்பு சொன்னார் மகளே நான் உன்னை விலை கொடுத்து வாங்கிவிட்டேன். ஆனால் ஒன்று செய், உனக்கு இஷ்டமான வாழ்வை தெரிந்து கொள்ளலாம். நீ போகலாம் என்று சொன்னார். இதை கேட்ட அந்த பெண்மணிக்கு சந்தோஷம் மட்டும் அல்ல, அந்த அன்பினால் சந்தோஷம் அடைந்து அவள் சொன்னாள், ஐயா நான் உமக்கே அடிமையாக வாழ விரும்புகிறேன். நீங்கள் விடுவித்தது உண்மைதான், ஆனால் அதேவெளையில் நான் என்னுடைய வீட்டிற்கு இல்லாவிட்டால் வேறொரு வாழ்விற்கு செல்ல விரும்பவில்லை. உம்முடைய அன்பிற்காக உமக்கே பணிபுரிய ஆசைப்படுகிறேன் என்று ஒப்புக்கொடுத்தாள். இதுபோலவே இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். அவர் நம்மை விலைகொடுத்து, கிரையம் செலுத்தி பாவத்திலிருந்து மீட்டு எடுத்துவிட்டார்.

இப்பொழுது நீங்கள் நானும் விடுதலையாக இருக்கின்றோம். நினைத்த வாழ்வை விரும்பினால் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் தேவன் விரும்புகிறார், நீங்கள் அவரை தேர்ந்தெடுத்து வாழவேண்டும் என்று. அவரை எஜமானனாக, கர்த்தராக தேர்ந்தெடுத்து வாழ வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதை நீங்களே செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். ஆகவே நீங்கள் சொல்லவேண்டும், கர்த்தாவே நரகத்தில் வாழ வேண்டிய என்னை, விலைகொடுத்து, கிரயம் கொடுத்து, மீட்டு எடுத்து விட்டீங்க. ஆகவே ஆண்டவரே வாழ்நாள் முழுவதும் உம்மையே சார்ந்து உமக்காவே வாழ்வேன். இந்த உலகில் வாழும்வரை உமக்கு அடிமையாக என்னை ஒப்புக்கொடுக்கிறேன். என் ஜீவனை என்னுடைய ஆவி,

ஆத்துமா, சரீரத்தை, சரீர உறுப்புகளை உமக்கு அடிமையாக ஒப்புக்கொடுக்கிறேன். நீதியின் ஆயுதங்களாக ஒப்புக்கொடுக்கிறேன். இதுவரை நான் பாவம் செய்வதற்கு இந்த உடல் உறுப்புகள் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இப்பொழுது நீதியை செய்வதற்காக நீதியின் ஆயுதங்களாக, கைகளை, கால்களை, சிந்தையை, உறுப்புகளை அப்படியே ஒப்புக்கொடுக்கறேன் என்று கொடுக்கிற பெயர்தான் நீங்கள் தேவ வாழ்விற்கு அடிபணிகிற வாழ்வு. அப்படியே சார்ந்து வாழ ஒப்புக்கொடுக்கிற வாழ்வு என்ன செய்யும் தெரியுமா? தேவன் உங்கள் வாழ்வைக் குறித்து வைத்திருக்கிற உண்மையான திட்டத்திற்கு இது கொண்டுவந்துவிடும். நம்முடைய ஒவ்வொருவருடைய வாழ்வைக்குறித்தும் ஓர் உண்மையான திட்டம் ஒன்று தேவனுக்கு இருக்கிறது. உங்களுக்கும், எனக்கும் இப்படித்தான். என் மகனை பயன்படுத்தப்போகிறேன், என்னுடைய மகன். இவ்விதமான காரியத்தை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். ஓர் மேலான திட்டத்தை உங்கள் வாழ்விலே, என் வாழ்விலே தேவன் ஏற்படுத்துகிறவராக இருக்கிறார். ஆனால் இதை புரிந்துகொள்ளாமல்தான், நிறைய பொய்யான திட்டங்களை பிசாசு வைத்து விடுகிறான். மனிதர்கள் அதிலேதான் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள். அவர்கள் தேவ திட்டத்திற்காய் வாழ்வதை விட்டுவிட்டு தங்களுடைய சுய திட்டத்தின்படி, சுய விருப்பத்தின்படி வாழ ஒப்புக் கொடுத்து விட்டார்கள். சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தார்களோ? இல்லையோ? சுயத்திட்டத்தின்படி வாழ்வது சாத்தானுடைய திட்டத்தை நிறைவேற்றுவதுதான். என் வாழ்க்கையில் நான் முன்னேற வேண்டும், சமுதாயத்தில் உயர்ந்த இடத்திற்கு நான் வரணும், என்னை எல்லோரும் மதிக்கணும், என் சொல்லைக் கேட்கணும், நான் இந்த ஊரிலே மிக பெரிய தலைவனாய் இருக்கணும். இப்படி தங்கள் திட்டத்திற்காக தங்கள் விருப்பத்திற்காக ஒரு தொழிலை செய்துகொண்டு கர்த்தாவே இதை நீங்க ஆசீர்வதிங்க, நான் இப்படி செய்யும்பொழுது என்னை சமுதாயம் உயர்ந்த இடத்தில் வைக்கும், ஆண்டவரே எனக்கு பல லட்சங்கள் வரும்போது, ஆலயங்கள் கட்டிக்கொடுப்பேன், தேவாலயத்திற்கு காணிக்கை கொடுப்பேன், இப்படி உங்கள் திட்டப்படி முடிவு செய்கிறீர்கள். அது சரியான விஷயம் அல்ல. உங்கள் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுக்கிற இடத்தின் பெயர்தான் தேவ திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்கிற ஓர் இடம் ஆகும். தேவன் உங்கள் வாழ்வில் கொண்டிருக்கிற உண்மையான திட்டத்திற்கு இப்போது அடிபணிந்து விட்டீர்கள், உங்களை எந்த இடத்தில் வைக்கணுமோ, அந்த இடத்தில் சேர்க்கிற பொறுப்பை

எடுத்துக் கொள்கிறார். இந்த வாழ்விலே நீங்கள் நினைப்பீர்கள். என் வாழ்விலே என்னதைத்தை செய்யப்போகிறேன். எந்தத் தாலந்தும் எனக்கு இல்லை என்னறு நினைப்பீர்கள். ஆனால் எப்பொழுதும் ஆண்டவரை எஜமானனாக ஏற்றுக்கொண்டு அப்படியே சார்ந்து வாழ்கிற வாழ்வுக்கு ஒப்பு கொடுக்கிறீர்களோ, அன்றிருந்து உங்கள் வாழ்வில தேவன் எந்த திட்டம் வைத்திருந்தாரோ, அந்த உண்மையான திட்டத்திற்கு நேராய் உங்களை நடத்திக்கொண்டு சென்று விடுவார். அவரால் செய்யமுடியும். உங்களால் எங்கெல்லாம் கொண்டுபோக முடியாது என்று நினைக்கிறீர்களோ, அங்கெல்லாம் கொண்டு போக முடியும். ஏன் என்றால் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன். இதுதான் ஓர் ஆச்சரியமான ஓர் வாழ்வு. வெற்றியான வாழ்வுக்கு நீங்கள் பெரும்பாடுபட வேண்டியது இல்லை. அப்படியே அவரை சார்ந்து வாழ்வது, இப்பொழுது உங்கள் வாழ்வைக் குறித்து மாபெரும் திட்டத்தை நன்மைக்கேதுவான திட்டத்தை, சமாதானத்துக்கேதுவான திட்டத்தை, உயர்வான திட்டத்தை, மேன்மையான திட்டத்தை வைத்திருக்கிற இடத்திற்கு நேராய் நடத்த ஆரம்பித்து விடுவார். அதன் பெயர்தான் வெற்றியான வாழ்வு, அவரோடு ஐக்கியம் கொண்டு, மற்றவர்களோடு ஐக்கியம் கொண்டும் வாழ்கிற வாழ்வில் நடத்தி தேவ சமதானத்தோடு, தேவ திட்டத்தோடு தேவ வாழ்க்கையின் குறிக்கோளை உடையவர்களாய் ஆகும்பொழுது, ஓர் அர்த்தமுள்ள வாழ்வை நடத்துகிற இடத்திற்கு வந்துவிடுவீர்கள். வாழ்வில் ஓர் அர்த்தம் வந்தால் போதும், நீங்கள் வெற்றியுள்ள வாழ்வை நடத்த ஆரம்பித்துவிட்டீர்கள்.

அடுத்து ஆறாவது படிக்கு வருகிறோம். வெற்றியுள்ள வாழ்வில் ஆறாவது படி நீங்கள் உங்களை முழுவதும் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டில் முழுவதும் உங்களை ஒப்புவித்து விடுங்கள். அதாவது உங்கள் வாழ்வை பரிசுத்த ஆவியானவர் கட்டுப்படுத்த ஆரம்பிக்க வேண்டும். நீங்களும், நானும் வாழ்கிற வாழ்வு சாதாரணமான வாழ்வு அல்ல. நிறைய பேர் நினைக்கிறார்கள், கிறிஸ்தவ வாழ்வு ஓர் பயித்தியக்கார வாழ்வு என்று, ஏதோ சர்ச்சிக்கு போகிறோம, வருகிறோம், ஏதோ போக்கத்தவர்கள் போல நினைக்கிறார்கள், உங்களை ஏதோ சாதாரணமானவர்கள் என்று உங்களை நீங்கள், நினைக்கிறீர்கள். ஆனால் பார்க்க அப்படித்தான் தெரியும். ஏதோ ஆலயத்திற்கு செல்கிறோம், வருகிறோம் என்று எளிதாக மட்டும் நடத்தினீர்கள் என்றால் அப்படித்தான் இருக்கும். ஆனால் உங்கள் வாழ்வில் அசாதாரணமான ஓர் காரியத்தை செய்யக்கூடிய ஓர் தேவன்

உங்களோடு இணைந்து இருக்கிறார். நீங்கள் அவரோடு இணைந்து இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் எதிர்பாருங்கள், ஓர் அசாதாரணமான வாழ்வுக்கு நேராய் போகப் போகிறீர்கள். இதுவரை சாதாரணமான ஓர் மனிதனாய் இருந்தீர்கள். ஆனால் இப்போது தேவனோடு இணைந்துவிட்டபடியினால் தேவனோடு ஒப்புரவாகி விட்டதினால் கிறிஸ்துவுடன் இணைந்துவிட்டபடியினால், இப்போது ஓர் இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்வை நடத்த போகிறீர்கள். இப்போது ஆச்சரியமான இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்வை நடத்த வேண்டும் என்றால், அது உங்களால், என்னால் கூடாது. இப்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுடைய தேவனுடைய வல்லமை நமக்குத் தேவை அதுதான், பரிசுத்த ஆவியானவர், அவர்தான் நம்மை பெலப்படுத்துகிறவர். சாட்சியாக வாழவைப்பவர். நீங்களும், நானும் நம்முடைய பெலத்தினால் இயேசுகிறிஸ்துவுக்காய் வாழ்வது கூடாது காரியம். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டில் முற்றிலுமாய் இணைந்து இருக்கும்போது நீங்கள் அவருடைய உதவியோடு நடத்தக்கூடிய வாழ்வைப் பெற்றுக்கொள்வீர்கள். எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது. இப்போது தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள்.

அவருடைய பிள்ளைகள், புத்திரர்கள், வாலிபர்கள் என்று சொல்லலாம். பரிசுத்த ஆவியினால் வளர்ந்து விட்ட பிள்ளைகளாய் இருக்கிறீர்கள். இப்போது பரிசுத்த ஆவியினால் நடத்தப்படும்பொழுது அவர் உங்களை நடத்துகிறார். அவர் உங்களை நடத்த விரும்புகிறார். ஒரு ஓட்டுநரைப் போன்று உங்களை நடத்தி எங்கே கொண்டு போகவேண்டுமோ, அங்கே கொண்டுபோக, உங்களை நடத்த ஓர் நடத்துநராக இருக்க விரும்புகிறார். நீங்கள் எளிதாக செய்ய வேண்டியது: இந்த ஆவியானவருடைய நடத்துதலுக்கு ஒத்துபோக வேண்டியது, அவ்வளவுதான். ஓர் வெற்றியுள்ள வாழ்வைத் தரத்தான் ஆவியானவர் உங்களோடு இணைந்து இருக்கிறார். ஆகவே அந்த இடத்துக்கு உங்களை கொண்டுபோய்ச் சேர்ப்பார். பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படிதல் என்றால் என்ன? வேதத்தில் நமக்கு சொல்லப்பட்டு இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரை அவித்துப்போடாதிருங்கள் என்று. நிறைய வேளைகளில் அவருக்கு கீழ்ப்படிகிறோம் என்று சொல்லுகிறவர்கள

செய்கின்ற தப்பு பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிற வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல் ஆவியை அவித்து போடுகிற தன்மையை செய்கிறார்கள்.

அவர் ஏதோ சொல்லிக்கொண்டு இருப்பார், அது ஏதோ மனதில் தோன்றிய வார்த்தை என்று சொல்லி அவிழ்த்து போட முடியும். அதை தனித்துப்போட முடியும். ஆனால் கீழ்படிகிற ஓர் மகனால் தேவன் தருகிற ஆவியானவருடைய அந்த வார்த்தையை அவிழ்த்துப்போட முடியாது. அப்போது அவன் அதற்கு கீழ்ப்படிவான். ஏதோ அவர் என்னோடு சொல்லியிருக்கிறார். அதற்கு கீழ்படியவேண்டும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒவ்வொரு மணிதுளியிலும்கூட தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அப்படியே வாழ்க்கை பயணத்தை நடத்த கர்த்தர் எதிர்பார்க்கிறார். இதை நீங்கள் மனதார முழுசிந்தையோடும் கீழ்ப்படிந்து போக கர்த்தர் எதிர்பார்க்கிறார். பிசாசின் நடத்துதலுக்கு முழு சிந்தையோடு போக முடியாது. முழு நோக்கத்தோடு போக முடியாது. உங்கள் நோக்கத்தையெல்லாம் தாண்டி, நீங்கள் சுயமாக எடுக்கிற முடிவுகளையெல்லாம் தாண்டி உங்களை பிடித்துக்கொள்ளுவான். ஆவியானவர் நடத்துகிறது, நீங்கள் விருப்பப்பட்டு ஒப்புக்கொடுக்கவேண்டும். நீங்களே மனதார ஆவியானவரே நீங்க நடத்துங்க என்று சொன்னால் அவர் உங்களை நடத்துவார்.

ஆனால், பிசாசுக்கு, சாத்தானுக்கு அப்படி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவனே உங்க வாழ்வில் தலையிடுவான். உங்கள் விருப்பங்களை தூர எடுத்துப்போடுவான். நீங்கள் விரும்பாத இடத்திற்கு கொண்டுபோவான். தான் விரும்புகிறதை உங்கள் வாழ்வில் சாதிப்பான். அதனால்தான் பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுக்கு கீழ்படிந்து அவனை எதிர்கவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுக்கு கீழ்ப்படியாமல் பிசாசுக்கு எதிர்த்து நின்றால் அவன் ஓடிவிட மாட்டான். முதலாவது தேவனுக்கு கீழ்ப்படியவேண்டும். ஆவியானவருக்கு கீழ்ப்படியவேண்டும். அவருக்கு அடிபணியவேண்டும். இப்போது பிசாசை ஜெயித்த வாழ்வைப் பெறுகிறீர்கள். உங்களுக்கு தேவன் நிச்சயித்த வாழ்வைப் பெறுகிறீர்கள்.

## 7. வளரவேண்டும் என்பதை வாஞ்சிக்க வேண்டும்:

கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி அடைவதற்கு வளர்ச்சி அடைவதற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். அதை வாஞ்சிக்கவேண்டும். நீங்கள் வாஞ்சிக்கவேண்டும்.

தேவனுடைய ஆவிக்குரிய வாழ்வில் வளர நீங்கள் விரும்பவேண்டும். ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து பெருகவேண்டும் என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. இப்போது இதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஆவிக்குரிய வாழ்வில் எந்த இடத்தில் இருக்கிறேன், எந்த இடத்தை நோக்கி வளர்ந்து கொண்டு இருக்கிறேன். என்னுடைய நிலைமை என்ன என்று கர்த்தருக்குள் அறியவேண்டும். உலகில் உள்ள மனிதர்கள் எல்லாம் தங்களுடைய தொழிலில் இவ்விதமாய் அறிந்து வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆனால் சில நபருக்கு தொழிலில் கூட எந்த இடத்தில் இருக்கிறோம் என்று சரியாக தெரியாததால்தான் தோற்றுப்போனார்கள். அவர்களுக்கு பணம் வந்ததும் கண்கள் குருடானதுபோல் ஆகிவிடும். ஒரு தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். பல லட்சங்கள் வரும் உண்மைதான். எவ்வளவு லட்சங்கள் மூலதனமாய் இருக்கவேண்டும் என்று அறியவேண்டும். மூலதனத்தையும் சேர்த்து பல லட்சங்களை செலவழித்து விடுவது தவறு. அது முதலீடு, அந்த மூலதனம் மறுபடியும் போடப்படவேண்டும். எவ்வளவு பொருள்கள் இருப்பு வைக்க வேண்டும். மீண்டும் எவ்வளவு பொருள்கள் வாங்கப்படணும் என்பதை மறந்து ஆடம்பர வாழ்வில் பலர் வாழ்ந்து, தன் தொழிலை இழந்து போனார்கள். அவர்களுக்கு நாம் எங்கே இருக்கிறோம் என்று புரியவில்லை, எப்படி போய்க்கொண்டு இருக்கிறோம் என்பது தெரியாததினால் வீழ்ச்சி. அதைப்போல ஆவிக்குரிய வாழ்க்கையிலும் எங்கு இருக்கிறீர்கள். எந்த இடத்தில்போய்க் கொண்டு இருக்கிறீர்கள், நீங்கள் சரியான வளர்ச்சியை நோக்கித்தான் சென்றுகோண்டு இருக்கிறீர்களா? அது உங்களுக்கு தெரியவேண்டும். அதுதான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படை. நான் எங்கே இருக்கிறேன், தேவன் என்னை அவரிடம் இழுத்து சேர்க்க எவ்வளவு பிரயாசம் எடுத்து செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார், என் வாழ்க்கையில் சூழ்ந்து இருக்கிற நிகழ்வுகள் எதற்காக வந்திருக்கிறது, அது எந்த அளவிற்கு கிறிஸ்துவண்டை கிட்டிச்சேர்க்கும்படி செய்கிறது என்பதையெல்லாம் நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். நீங்கள் ஓர் நோக்கத்தோடு கிறிஸ்துவில் பெருக ஒப்புக்கொடுக்கும்போது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு உங்கள் கைகளில் வந்துவிடுகிறது. நீங்கள் நான் குறிப்பிட்ட வழியின் வழியாக இதை செய்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவில் வளருகிற வழிகளை கண்டுபிடித்து அதன் வழியாய் செல்ல ஆரம்பிக்கிறீர்கள். அது உங்களுக்கு வெற்றியை குவித்து தருகிறது. கொஞ்சம்

யோசித்து பாருங்கள். ஒப்புக்கொடுங்கள், அப்போது கர்த்தர் நம்மை எப்படி ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு நேராக அழைக்கிறார், நடத்துகிறார் என்றெல்லாம் புரிந்துகொள்வீர்கள். நீங்களும், நானும் ஆவிக்குரிய வாழ்வை எங்கே ஆரம்பித்தோமோ, அங்கேயே இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறது இல்லை. அநேகர் அப்படியே இருக்கிறார்கள். கடுகளவு விசுவாசம் இருந்தால்போதும், முன்னே எப்படி விசுவாச வாழ்வை நடத்தினார்களோ அப்படியேதான் இன்னும் நடத்துகிறார்கள். ஏதோ வேதம் வாசித்தோம், ஏதோ ஜெபம் பண்ணினோம், ஏதோ ஆலயத்திற்கு செல்கிறோம், அவ்வளவுதான், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாமல் போகவேண்டும். ஒவ்வொரு வாரமும் உபவாசம் இருக்கவேண்டும், காணிக்கை ஒழுங்காக செலுத்தவேண்டும். அப்பொழுது நாம் எதிர்பார்க்கலாம், தேவன் நம் தொழிலை ஆசீர்வதிப்பார், நம்மை ஆசீர்வதிப்பார், நாம் முன்னேற்றமாய் இந்த உலகத்தில் வாழ்ந்து விடுவோம். எந்த பிரச்சனையும் வராது நம்மை காத்துக்கொள்வோம். சமாதானமாய் நம்முடைய வாழ்வு போகும் என்பது மட்டும்தான் அநேகருடைய விசுவாசத்திற்கு அடிப்படையாக இருக்கிறது. இல்லை பிரியமானவர்களே நீங்கள் முதிர்ச்சி உள்ளவர்களாகும்படி கர்த்தர் விரும்புகிறார் என்றுதான் சற்று முன்னர் கூறிக்கொண்டு இருந்தேன். நீங்கள் முதிர்ச்சி அடையவேண்டும். அதை அழகாக உபாகமத்தில் வாசிக்கின்றோம். உபாகமம் 32:11-ஐ வாசிக்கிறேன். கழுகு தன் கூட்டை கலைத்து தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி செட்டைகளை விரித்து அவைகளை தன் செட்டைகளில் எடுத்துக்கொண்டு போகிறதுபோல, அதாவது கழுகுதன் குஞ்சுகளுக்கு பறக்காட்டும்போது என்ன செய்யும். கூட்டை முதலாவது கலைக்கவில்லை. அந்த குஞ்சு அதில்போய் அமர விரும்பகூடாது அல்லது போக கூடாது என்று அந்த கூட்டை கலைத்து விடுமாம். பிறகு அதை தன் முதுகின்மேல் சுமந்துகொண்டு பறக்கிறது. பிறகு திடீரென்று போகும்போது பார்த்தீர்களானால் குஞ்சை விட்டுவிட்டு சென்றுவிடும். அந்த குஞ்சுகள் சிறகை விரிக்க வேண்டியதாய் இருக்கும். அப்போது செட்டைகளை விரித்து அடிக்கும்போது அந்த குஞ்சுகள் இந்த அம்மாவுக்கு அன்பே இல்லையே, இப்படி என்னை தனியாய் பறக்கவிட்டு விட்டார்களே என வருந்தக்கூடும். வருந்தும்பொழுது சில நேரங்களில் தடுமாறவும் கூடும். அது தடுமாறும்பொழுது அது மீண்டும் அந்த குஞ்சுகள் மீது அசைவாடி கீழேவந்து திரும்ப அந்த குஞ்சுகளை முதுகின்மேல தூக்கிக்கொண்டு போகுமாம். மேலே போகும்போது

அந்த குஞ்சுகளுக்கு சிறிது நம்பிக்கை இருக்குமாம். அம்மா நம்மை காப்பாற்றி விட்டார்கள். அப்படி நினைக்கும்போது மேலே கோண்டுபோய் திரும்பவும் விட்டு குஞ்சுகளை பறக்காட்டுவதற்காக அந்த பெரிய கழுகு, தாய் கழுகு தள்ளிப்போய் விடுமாம். இவ்விதமாய் தள்ளாடும்போது மேலேதூக்கி விட்டு மறுபடியும் பறக்கவிட்டு இவ்விதமாய் கொஞ்சம் பயிற்சி கொடுத்த பிறகு அந்த குஞ்சு கழுகு பறக்க ஆரம்பித்து விடுகிறது.

இப்பொழுது அதற்கு தெரிகிறது, புதியதொரு உலகத்தில் பறக்கிறேன். என்ன ஆச்சரியமான உலகம் இது என்று இப்படி கற்றுக்கொண்டது. ஆனால் முன்னால கூட்டில் இருக்கும்போது அதற்கு வேறு உலகமே தெரியாது. தன்னுடைய பெற்றோர் கொண்டுவந்த உணவை வாங்கி சாப்பிட்டது. அவ்வளவுதான், எப்பொழுதும் அந்த தாய் கழுகை பார்த்துக்கொண்டு இருக்கும். இல்லாவிட்டால் பெற்றோர் கழுகு எப்பொழுது வரும் என்று எதிர்பார்க்கிறது. இது வருகிற உணவை சாப்பிடும், தூங்கும், சத்தம் இல்லாமல் சோம்பேறியாய் இருக்கும். ஆனால் கழுகின் திட்டம் இதுவல்ல. நம்முடைய குஞ்சுகளை குறித்த திட்டம் அதுவல்ல. அது தானாய் தனியாய் பறக்கவேண்டும். அது தனியாக நின்று சாதிக்கும்படி, அதற்கு புதிய வாழ்வை உருவாக்க வேண்டும். ஆகவே கூட்டை கலைத்து அங்கிருந்து வெளியே கொண்டுவந்து இப்படியாக பயிற்றுவிக்கிறது.

பிரியமானவர்களே இந்த எடுத்துகாட்டை கர்த்தர் நமக்காக வைத்திருக்கின்றார். இப்போது நீங்களும் இவ்விதமாக ஓர் முதிர்ந்த இடத்திற்கு செல்லவேண்டும் என விரும்புகிறார். எப்பொழுது நீங்கள் ஜெபம் செய்தாலும் உணவு கொடுத்துவிட்டு செல்லும் தேவனாக இருக்க அவர் விரும்பவில்லை. நீங்கள் ஜெபம் செய்யவேண்டும். அவர் அற்புதம் செய்யும் வாழ்வை அவர் விரும்பவில்லை. நீங்கள் எழுந்து கர்த்தர் அற்புதம் செய்கிற இடத்திற்கு வரவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவருடைய உதவியோடு நீங்கள் எழுந்து நின்று அநேகருக்கு ஆசீர்வாதமாய் நிற்க கர்த்தர் விரும்புகிறார். அதற்கு அவர் பயிற்றுவிக்கிறார். ஆங்காங்கே தனியாய் விடுவதுபோல தோன்றும். ஐயோ கர்த்தர் கைவிட்டுவிட்டார் என்று சொல்வீங்க. ஆனால் அவர் கைவிடவில்லை. தனியாய், கர்த்தருக்காய் சாதிக்க பழக கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறார். எப்பொழுதும் கர்த்தர் செய்யவேண்டும், செய்யவேண்டும் என்பதை விட்டு

இப்பொழுது நீங்கள் செய்யவேண்டும். தேவனுடைய நாமத்தினால் அற்புதத்தை நிகழ்த்தவேண்டும். தேவ நாமத்தினால் தேவ ராஜ்ஜியத்தை கட்டவேண்டும் என்றும் இப்பொழுது கொஞ்சம் விலகி நின்று பயிற்சி கொடுக்கிறார். தள்ளாடும்போது நிச்சயமாய் உதவி செய்வார். கைவிடமாட்டார், விட்டுவிட மாட்டார், தூக்கி மீண்டும் உயரே கொண்டு சென்று திரும்பவும் அதே பயிற்சியை கொடுக்கிறார்.

பிரியமானவர்களே, ஆவிக்குரிய வாழ்வு என்பது இதுதான். வெற்றியுள்ள வாழ்வு என்பது இதுதான், கர்த்தர் இவ்விதமாக நம்மை பயிற்றுவிக்கிறார், தேவனுக்குள்ளே முதிர்ச்சியான நிலையை அடையத்தான் பலதரப்பட்ட வழிகளிலே உங்கள் வாழ்விலே என் வாழ்விலே செயல்பட்டு கொண்டு இருக்கிறார். அதை புரிந்து கொண்டவர்களாய் கர்த்தருக்காக வாழும்பொழுது வெற்றியுள்ள வாழ்வு உங்களை தேடி வந்துகொண்டே இருக்கும். அதை அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள், நாம் இதுவரை வெற்றி பெறுவதற்கு செய்ய வேண்டிய ஏழு படிக்கட்டுகள் குறித்து சிந்தித்தோம். இவற்றையெல்லாம் நாம் செய்ய அர்ப்பணிக்கும்போது தேவன் நிச்சயமாக நமக்கு வெற்றியை தருவார், இல்லாவிட்டால் வெற்றியை கொண்டுவருகிற இடத்திற்கு கொண்டுபோய் சேர்ப்பார் என்று நாம் சிந்திக்கின்றோம்.

எவைகளிலெல்லாம் வெற்றி பெறவேண்டும், எதில் எல்லாம் வெற்றிபெறவேண்டும் என்று வேதம் சொல்கிறது என்ற தலைப்பின் கீழே சிந்திக்க ஆரம்பிக்கின்றோம். வேதத்தின்படி கூறுகிறீர்கள்.

ஆம் பிரியமானவர்களே, நாம் எதில் வெற்றி பெற வேதம் எதிர்பார்க்கிறது என்பதை அறிந்துகொண்டால், நாம் குறிப்பிட்ட வெற்றியை பெறுவதற்கு நேராக திட்டமிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் அது உதவியாக இருக்கும். எதிலெல்லாம் நாம் வெற்றிபெற வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

## 1. <u>பண விஷயத்தில் வெற்றி பெறவேண்டும்:</u>

முதலாவது காரியம், பண விஷயத்தில் வெற்றி பெற வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஏனெனில் இது ஆவிக்குரிய வாழ்வில் தோற்கடிக்கப்பட்ட ஓர் விஷயமாய் இருக்கிறது. இது மிக முக்கியமான காரியம். நாம் வெற்றிபெற வேண்டிய ஓர் இடம் பணம் ஏனெனில் உலகத்தில் பணம் நமக்கு தேவையாய் இருக்கிறது. பணம் இருந்தால் அநேக காரியங்களை சாதிக்கமுடியும். பணம் எல்லாவற்றிற்கும் உதவும் என்று நாம் பார்க்கின்றோம். பணத்தைக்கொண்டு

ஊழியத்தை சிறப்பாய் செய்ய முடியும். பணம் இருந்தால் வாழ்விலே உயர்ந்த இடத்தில் இருக்க முடியும். சமுதாயத்தினால் மதிக்கப்பட முடியும், நல்ல வாய்ப்பு வசதிகளை பெற்று வாழமுடியும், நல்ல திடமான ஆரோக்கியமான சுவையான உணவை உண்பதற்கு பணம் தேவையாக இருக்கும் என பல பயன்களை கூறிக்கொண்டே இருக்கலாம்.

ஆகவே பணம், வாழ்வில் ஓர் முக்கியமான காரியமாய் இருக்கிறது. உலக மனிதனாய் இருந்தாலும், ஆவிக்குரிய மனிதனாய் இருந்தாலும் பணம் என்பது எல்லாருக்கும் தேவைப்படுகிற, பயன்படுகிற ஒன்றாக இருக்கிறது. ஆகவே ஆவிக்குரிய வாழ்வில் இருக்கிற உங்களையும், என்னையும் பார்த்துதான் கர்த்தர் சொல்லுகிறார். பண விஷயத்தைக் குறித்து மிக கவனமாய் இரு என்று. அது எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது என்றும் வேதம் சொல்லுகிறது. நான் அந்த வசனங்களை வாசிக்கிறேன், அப்போது நீங்கள் புரிந்துகொள்வீர்கள். ஆகவே நாம் எவ்வளவு தூரம் கவனமாய் இருக்க வேண்டும், அதில் வெற்றி பெற வேண்டும் என்பதை நாம் கற்றுக்கொள்ளலாம். 1 தீமோத்தேயு 6:6-11 ‘‘போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.’’ என்று தீமோத்தேயுவுக்கு ஆலோசனையாக எழுதுகிறதை நாம் அறிந்துகொள்கிறோம். பண ஆசை எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது, பணம் தேவைதான், ஆனால் பணத்தின்மேலே ஆசை கூடாது என்பதை நீங்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். பண ஆசைதான் எல்லா தீமைக்கும் வேராய் இருக்கிறது.

அதுதான் உங்களுடைய, என்னுடைய விசுவாச வாழ்வை கெடுக்கிறதாய், விசுவாசத்தை விட்டு விலகச் செய்கிறதாய் இருக்கிறது. அநேக வேதனைகளினால் நம்மை நாமே உருவ குத்திக் கொள்கிற வேதனையை கொடுக்கிறதுதான் பணஆசை. ஆகவே 1 தீமோத்தேயு 6:6ன் துவக்கத்திலே கூறிவிட்டார். போதும் என்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். வெறும் ஆதாயம் என்றால் சிறந்த விஷயம் அல்ல, மிகுந்த ஆதாயம். எப்பொழுது வரும் போதும் என்கிற மனதுடனே கூடிய தேவபக்தி உடையவர்களாய் இருக்கும்போது, பண ஆசையை நாம் வெற்றிகொள்ள வேண்டியிருக்கிறது. வெற்றிகொள்ள வேண்டிய முதலாவது இடம் என்று இதை சொல்லலாம். இது நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் பணம் அநேக விஷயங்களுக்கு தேவை என்பதை அறிந்து இருக்கிறோம். அது தேவைதான். ஆனால் பண ஆசைக்கும், பணத்தேவைக்கும் இடையே இருக்கிற வித்தியாசத்தை புரிந்து, நம்முடைய இருதயத்திலே போதும் என்கிற மனதுடனே வாழ கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

இதை செய்யாதபோது, இதில் வெற்றியை பெறாதபோது, அநேகர் ஆவிக்குரிய வாழ்விற்கு வந்த பிறகும்கூட பண ஆசையினாலே வீழ்ந்துபோன நிலையில் இருக்கிறார்கள். கர்த்தர் என்ன தந்தாரு? எங்கே கர்த்தர் என்னை உயர்த்தினாா?. எங்கே ஓர் சிறந்த இடத்திற்கு கர்த்தர் கொண்டு சென்றார்? அன்று இருந்தது போலவே இன்னும் இருக்கிறேனே, அந்த ஊழியர், அந்த மனிதர் கொஞ்சம் வந்தாரு, ஜெபம் பண்ணினார், எவ்வளவு உயர்ந்த இடத்திற்கு போய் விட்டாரு. ஆனால் நான் அப்படியே இருக்கிறேனே என்று நினைக்கிற இடத்திற்கு பண ஆசை கொண்டுவந்துவிடும். இதனால் நாம் சோர்ந்துபோய் விடுவோம். விசுவாச வாழ்வில் விலககூட நேரிடும். ஆகவே ஜெயம் கொள்ள வேண்டிய முதலாவது இடம் பண ஆசை. அதற்கு தேவன் தருகிற தீர்ப்பை பாருங்கள். எபிரெயர் 13: 5-6, நீங்கள் பணஆசை இல்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகளே போதும் என்று எண்ணுங்கள். நான் உன்னைவிட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதும் இல்லை என்று அவர் சொல்லி இருக்கிறாரே. அதனால் நாம் தைரியம் கொண்டு கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே என்று வாசிக்கின்றோம். ஏனெனில் பணஆசை இல்லாதவர்களாய் நீங்கள் நடந்து

கொள்ளுங்கள், ஏன் தெரியுமா? கர்த்தர் சொல்லி இருக்கிறாரே, நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னை கைவிடுவதும் இல்லை என்று உறுதிபட சொல்லியிருக்கிறார். நம்பு, அதனால் பணஆசை இல்லாதவர்களாய் நடந்து கொள்ள, இருக்கிறது போதும் என்று வாழ்வை நடத்துங்கள். உன் தேவையை கர்த்தர் அனுதினமும் சந்திப்பார் என்று வேதவசனம் நம்மை விசுவாசிக்க உறுதிபட சொல்லுகிறது. அப்போது நாம் பண ஆசையிலே முதலாவது வெற்றி கொள்ள வேண்டும்.

ஏனெனில் இதில்தான் நாம் தவற அதிக வாய்ப்புகள் இருக்கிறது. ஏனென்றால் இது, நமது பாக்கெட்டில், இருதயத்திற்கு பக்கத்தில் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். ரொம்ப அருகில் இருக்கிறது. அதனால் நாம் ஓர் வெற்றியுள்ள வாழ்வை சுதந்தரிப்பதற்கு இந்த பண ஆசை தடையாக இருக்கிறது. பணம் இல்லாவிட்டால் நாம் சோர்ந்து போய் விடுவோம். பணகுறைவு வந்துவிட்டால் தோல்வி அதிகம் வந்துவிடும். பணம் இல்லாவிட்டால் என்ன விசுவாச வாழ்க்கை, என்ன ஜெபம் அப்படியென்று சொல்லி ஆவிக்குரிய வாழ்வில் சோர்வை உண்டாக்கிவிடும். அப்போது உங்கள் ஆவிக்குரிய வாழ்வை பாதிக்கிற முதலாவது இடம் பணம் என்ற ஆசை. இந்த பண ஆசையின் மேலே முதலாவது வெற்றி பெறவேண்டும், போதும் என்கிற மனதும், என்தேவன் தேவைகளை சந்திப்பார் என்கிற மனதும் நமக்கு வேண்டும். அவர்தான் என்னைவிட்டு விலகமாட்டேன் என்று சொல்லி இருக்கிறாரே. ஆகவே அவர் என்னை பட்டினிபோட மாட்டார். நான் குறைவுகளில், கடனில் மாட்டி சிக்காதபடி காப்பார். அப்படி தைரியமான வார்த்தைகளை வசனத்தில் இருந்து பெறும்போது இந்த பண ஆசையின் மீதுவெற்றி பெறமுடியும். ஆக பண ஆசையின் மீது நீங்கள் வெற்றிபெற வேண்டியது அவசியம்.

## 2. <u>அதிகாரம் மற்றும் மதிப்பை குறித்த திட்டம்.</u>

உலகத்தில் நாம் அதிகாரத்தோடு வாழ விரும்புகிறோம். எல்லா மனிதர்களும் அப்படித்தான் இருக்கிறார்கள், சின்ன குழந்தை முதற்கொண்டு பெரியோர் வரை அதிகாரம் பண்ணத்தான் விரும்புகிறார்கள். தான் சொல்லுகிறதை மற்றவர்கள் கேட்கவேண்டும், வயதான மனிதர் தள்ளாடும் நிலையிலும் அவர் சொல்லுவார், நான் இவ்வளவு வயதானவர் சொல்லுகிறேன், கேட்கமாட்டீர்களோ, அப்படித்தான் சொல்லுவார். சின்னபிள்ளை தன்னுடைய அதிகாரத்தைதான்

காண்பிக்க விரும்புகிறது. அது என்ன நினைக்கிறதோ, அதைச் செய்தால்தான் அழாமல் இருக்கிறது இல்லாவிட்டால், அது நம்மை தொந்தரவு செய்கிறதைப் பாக்க முடிகிறது. இப்போது அதிகாரம், அதைக்குறித்து ஓர் விருப்பம்.

அடுத்து மதிப்பு, சமுதாயத்தில் மதிப்பு: இதற்காய் அநேகர் வாஞ்சையுடையவர்களாய் இருக்கிறதைப் பார்க்க முடிகிறது. அந்த உலக மனிதன்தான் அப்படி இருக்கிறான் என்றால் ஆவிக்குரிய வட்டாரத்தில் அதற்குமேல் இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். மனிதர்கள் இன்று இப்படித்தான் இருக்கிறார்கள் அதிகாரம் மற்றும் கவுரவம் பார்க்க விரும்புகிற வாழ்வு, இதைக்குறித்த ஓர் விருப்பம், ஓர் வாஞ்சை. எப்படியாவது இதை பெறவேண்டும் என்கிற எண்ணம். இப்படி எண்ணுகிறவர்கள் சின்ன விஷயமானாலும் அவர்கள் என்ன செய்வார்கள், சோர்ந்துபோய் விடுவார்கள். தாங்கள் அவமானப்படுத்தப்பட்டதாக நினைப்பார்கள், ஓர் வார்த்தை சொன்னால் கூட நீங்கள் என்னை மதித்தீர்களா? என்று கேட்பார்கள். அவர் எதிர்பார்க்கிறவர்களாக அதிகாரம் மற்றும் மதிப்பை எதிர்பார்க்கிற தன்மையினால் அப்படி பேசுகிறார்கள். நான் விரும்புகிறேன், நாம் வெற்றி கொள்ளவேண்டிய மற்றொரு இடம் அதிகார விருப்பம், மதிப்பை பெற விரும்புகிற விருப்பம். இவற்றின் மீது வெற்றிபெற வேண்டும், அதிகாரம் தேவனால் உண்டாயிருக்கிறது.

2 கொரிந்தியர் 3:5-லே பவுல் இவ்விதமாய் சொல்லுகின்றார். எங்களால் ஏதாவது ஆகும் என்று யோசிக்கும் அளவிற்கு நாங்கள் தகுதி ஆனவர்கள் அல்ல. எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார். அதாவது எங்களால், ஏதாவது ஆகும் என்று நினைப்பதற்கு கூட எங்களுக்கு தகுதி இல்லையென்று சொல்லுகிறார். பாருங்கள், இதுதான் ஆவிக்குரிய மனிதனின் சிந்தை எங்களுடைய தகுதி தேவன் தான் ஆனால் இந்த எண்ணம் அநேக ஊழியர்களிடத்தில், அநேக விசுவாசிகளிடத்தில் இல்லை, அவர்களும் விரும்புகிறார்கள், அதிகாரம் வேண்டும், நல்ல மதிப்பாக இருக்கவேண்டும். ஓர் திருச்சபை என்று இருந்தால் ஓர் இயக்கம் என்று இருந்தால் அதில் நல்ல அதிகாரம் இருக்கவேண்டும், மதிப்பு இருக்கவேண்டும், அப்படி என்று சொல்லி வாஞ்சிக்கிற வாஞ்சைதான் இன்றைய ஆவிக்குரிய வட்டாரத்தில் காணப்படுகிறது.

ஆனால் இதற்கு மேலும் வெற்றிபெற வேண்டியது அவசியம். பவுல் சொன்னதுபோல் நம்முடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. அவருடைய

கிருபையினால்தான் பிழைத்து இருக்கிறோம், எங்களால் ஏதாவது ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு கூட தகுதி அற்றவர்கள் என்று சொல்லுகிற இடத்திற்கு உங்களை தாழ்த்திப்பாருங்கள், தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான். இன்று சபைகளில் பிரச்சனைக்கு காரணம் இதுதான் அவர்கள் அதிகாரத்தை விரும்புகிறார்கள், மதிப்பை விரும்புகிறார்கள். அவர்கள் பல காரணத்தை சொன்னாலும் உண்மையில் அவர்கள் மனதில் வைத்திருக்கும் காரியமாய் இதுதான் இருக்கிறது என்னை அவன் மதித்தானா? என்னிடம் அந்த காரியத்தை முதலில் சொன்னானா, பல காரியங்களை யோசித்து, யோசித்து சண்டையிட்டு, இன்று சபைக்குள்ளே ஆவிக்குரிய கூட்டங்களிலே குழுவிலே பிரச்சனைகள், பிரிவினைகள் ஒருவரை ஒருவர் கடித்து பட்சிக்கிற நிலைமைகள், அப்படியே வீழ்ந்து போகிறதற்கு சாத்தான் இந்த அதிகாரம் மற்றும் கவுரவம் என்பதன் மீது மக்கள் கொண்டு இருக்கிற மோகத்தை பயன்படுத்துகிறான். இயேசுகிறிஸ்துவை வனாந்திரத்தில் வைத்து சோதித்த இடம் இதுதான். அதிகாரம் மற்றும் மதிப்பு.

இதைப்பற்றி நாம் படிக்கலாம். லூக்கா 4:3-ல் - ''அப்போது பிசாசு அவரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்த கல்லுகள் அப்பமாகும்படி சொல்லும்'' என்றான். அங்கு இயேசுவை சோதிப்பதற்கு பிசாசு பயன்படுத்திய முதலாவது காரியத்தை பார்க்கிறோம். அவன் சொல்கிறான் உம்முடைய அதிகாரத்தை காண்பியும் என்று கேட்கிறான். நீ தேவனுடைய குமாரன்தானே, உமக்குத்தான் அதிகாரம், வல்லமை இருக்குதே, அப்படியானால் இந்த கல்லை அப்பமாகும்படி சொல்லும். பார்த்தீர்களா, அதிகாரம் மற்றும் இதைக்குறித்த ஓர் மோகத்தை இயேசுவுக்கு கொடுக்கப்பார்க்கிறான். அதிலே வீழ்த்தவேண்டும் என்று முயற்சி செய்கிறான். அடுத்து லூக்கா 4:56 ஐ வாசிக்கிறபோது, ''பின்பு பிசாசு அவரை மலையின் மேல் கொண்டுபோய் உலகத்தின் சகல ராஜ்ஜியத்தையும் ஒரு நிமிடத்தில் காண்பித்து இவைகளில் எல்லாவற்றின் மீதுள்ள மகிமையும், அதிகாரத்தையும் உமக்குத்தருவேன். இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு இருக்கிறது, எனக்கு இஷ்டமானவனுக்கு இதைக்கொடுக்கிறேன், நீர் என்னை பணிந்துகொண்டால், எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான்'' என்று படிக்கிறோம். அப்போது உலகத்தின் சகல இராஜ்ஜியங்களையும் காண்பித்து உலகத்தின் மீதுள்ள அதிகாரத்தின் வாஞ்சையை காண்பிக்கிறான். எல்லா

அதிகாரமும் என்னிடம் உள்ளது, இவை வேண்டும் என்றால் என்னை பணிந்துகொள் என்று கேட்கிறான். இப்போது உலகத்தின் மீதான அந்த அதிகாரத்தை காண்பித்து இயேசுவை சோதிக்கிறான். ஆம் அதிகாரத்தின் இரண்டாவது பகுதி, முதலாவது ஆவிக்குரிய அதிகாரத்தை வைத்து சோதிக்கிறான். இரண்டாவது உலகத்தின் மீது உள்ள அதிகாரத்தை வைத்து சோதிக்கின்றான். மூன்றாவது லூக்கா 4:9-10 – ‘‘அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும். ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்.’’ என்று அங்கே சொல்லுகின்றான். மட்டுமல்ல உம்முடைய கால்கள் கல்லில் இடறாதபடிக்கு உம்முடைய கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்று எழுதி இருக்கிறது என்று சொன்னான் என்றும் லூக்கா 4:11 ல் பார்க்கின்றோம்.

இங்கே தேவனுடைய குமாரன் என்ற மதிப்பை பயன்படுத்துகிறதை பார்க்கிறோம். பாருங்கள் கைகளிலே ஏந்திக்கொண்டு போவார்கள், குதியும் உம்முடைய தூதர்கள் வந்து உமக்கு பணிவிடை செய்வார்கள், நீர் அவ்வளவு மதிப்பு வாய்ந்தவராக்கும், உமக்கு அவ்வளவு கனம் இருக்கிறது, நீர் அதைப் பயன்படுத்தும் என்று சொல்லி மதிப்பை பயன்படுத்துகிறான். மதிப்பை, கவுரவத்தை பயன்படுத்துகிறான் பிசாசு.

இவ்விதமாய் மூன்றுவித காரியங்களைக் கொண்டு அங்கே சோதிக்கிறதைப் பார்க்கிறோம். ஆவிக்குரிய அதிகாரம், பூமிக்குரிய அதிகாரம், அடுத்து மதிப்பு அல்லது கவுரவம். பிரியமானவர்களே இன்றும் உங்களையும், நம் ஒவ்வொருவரையும் இந்த மூன்று விதமான காரியங்களில் சோதிக்கிறவனாகவே இருக்கிறான்.

ஆவிக்குரிய வட்டாரத்தில் இருக்கிறீர்களா? அதிகார மோகத்தைக் கொடுத்து உங்களை வீழ்த்த விரும்புகிறான். அநேக ஆவிக்குரிய வட்டாரத்தில் இருக்கிற பெரும் தலைவர்கள் அநேகர், உலகத் தலைவர்களைவிட அதிகார மோகத்தோடு காணப்படுகிறதை அநேக இடங்களில் பார்க்கிறோம்.

உலக தலைவர்களுக்கு கூட சட்டம், ஒழுங்கு இல்லாவிட்டால் அரசு இல்லாவிட்டால் அதிகாரங்கள் மற்ற மேலதிகாரிகள் போன்ற கட்டுப்பாடுகள் இருக்கும். ஆனால் ஆவிக்குரிய சில மூத்த தலைவர்கள், ஆவிக்குரிய வட்டாரத்தில் ஊழிய தலைவர்கள் சிலரைச் சொல்கிறேன். எல்லாரையும் குறை சொல்வதற்கில்லை. இந்த விஷயத்தை விளக்கவே இதை நான் கூறுகிறேன். ஆம் பிரியமானவர்களே ஆவிக்குரிய அதிகாரத்தைக் கொண்டு மக்களை பிசாசு வீழ்த்த விரும்புகிறான் என்பதை ஜாக்கிரதையாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். இயேசுகிறிஸ்துவின் வாழ்விலும் அதைத்தான் கொண்டுவந்தான். நம் வாழ்விலும் அதைத்தான் கொண்டுவர விரும்புகிறான். ஆவிக்குரிய அதிகார மோகத்தைக் கொடுத்து வீழ்த்தப் பார்க்கிறான். அதில் வெற்றிபெற வேண்டியது அவசியம். பிசாசின் அதிகாரத்துக்கு அடிபணியாதிருங்கள். அதிகார மோகத்தோடு திரியாதிருங்கள்.

அடுத்து உலக அதிகாரத்தை காண்பிக்க விரும்புகிறான். கவுரவத்தை, மதிப்பைக் காண்பிக்க விரும்புகிறான். அதைவைத்து உங்களைத் தோற்கடிக்க விரும்புகிறான். ஆனால் வெற்றிபெற முடிவு செய்திருக்கிற உங்களுக்கு நிச்சயமாய் வெற்றி காத்திருக்கிறது. முதலாவது பண விஷயத்தில் வெற்றி பெற வேண்டியது அவசியம். இரண்டாவது அதிகார மோகம், மதிப்பின் மீது இருக்கிற மோகம், இவற்றின் மீது வெற்றிபெற வேண்டும் என்று கூறினேன்.

### 3. <u>இச்சையின் மீது வெற்றி பெற வேண்டும்:</u>

மூன்றாவது காரியம் இச்சை, இதன்மீது வெற்றிபெற வேண்டியது அவசியம். ஆவிக்குரிய வாழ்வில், பிசாசு பயன்படுத்துகிற, வீழ்ச்சியை ஏற்படுத்த கையாளுகிற ஒரு இடம் பெண்மீது இச்சை. வேசிக்கள்ளரைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேவன் அவர்களை நியாயந்தீர்ப்பார் என்றெல்லாம் வேதம் சொல்கிறது.

வாழ்வில் பிசாசு இந்த இடத்தில் வீழத்த விரும்புகிறான். அநேக மக்கள், பெரிய தலைவர்கள் வீழ்ந்துபோன இடம் இதில்தான் இருக்கிறது. மிகச்சிறந்த மக்கள் சிறுமைப்பட்ட இடமும் இதுவாகத்தான் இருந்திருக்கிறது. இதைக்குறித்து நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. தாவீதின் வாழ்க்கையைப் பார்க்கிறோம். அவன் பத்சேபாளோடு செய்த பாவத்திலே அவனுடைய வாழ்வு வீழ்ச்சியடைந்தது. ஆனாலும் கர்த்தருடைய கிருபையினால்

ஆண்டவரிடம் மனம் திரும்பினபடியினால் அவன் வெற்றிபெற்ற வாழ்வுக்குப் பிறகு வந்தான். ஆனால் சாலொமோன் தோற்கடிக்கப்பட்டவனாய் போனான் என்று நாம் பார்க்கிறோம்.

இன்று அநேக ஊழியர்கள் கூட, அநேக விசுவாசிகள்ள கூட தடுமாறுகிற இடம் இதுவாகத்தான் இருக்கிறது. இதைக்குறித்து நாம் மிக மிக கவனமாய் இருக்கவேண்டிய ஒரு இடமாய் இது இருக்கிறது. அப்போஸ்தலர் 15:28ல் இவ்விதமாய் நாம் வாசிக்கிறோம். ‘‘எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே.’’ மற்றும் எபேசியர் 5:3ல் - ‘‘மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது.’’ வேசித்தனம் என்ற அசுத்தம், பொருளாசை. இந்தக் காரியங்கள் பரிசுத்தவான்களாய் இருக்கிற உங்கள் வாழ்வில் அந்த பேருகூட அல்லது அந்த பேச்சுகூட உங்களைக்குறித்து வந்துவிடக்கூடாது என்று சொல்கிறார்.

ஆம் பிரியமானவர்களே, நாம் கவனமாயிருக்க வேண்டும் அல்லது வெற்றிபெற வேண்டிய மூன்றாவது இடமாகிய வேசித்தனம், இச்சை என்ற பாவத்தின் மீது நீங்களும், நானும் மிக மிக கவனமாயிருந்து வெற்றிபெற கர்த்தர் எதிர்பார்க்கிறார். இவைகளெல்லாம் மிக மிக நெருக்கமானவை. அதாவது அதை ஒரு பெரிய தப்பாககூட இருக்காத ஒரு இடத்தில் காண்பிக்கப்படுகிறதாய் இருக்கிறது. பணம் தேவை அதை ஆசை கொள்ளாத வகையில் கையாளவேண்டும் என்பது உங்களுக்கும் தேவனுக்கும் மட்டுமே தெரியுமேயொழிய மற்றவர்களுக்கு அது தெரியாதபடி உங்களால் நடிக்க முடியும். பணஆசை இருக்கும், ஆனால் இல்லாததுபோல பேச முடியும். கர்த்தர் சொல்கிறார் போதுமென்கிற உன் மனதை, மனதிலேயே உருவாக்கு. அப்படிப்பட்ட எண்ணத்தோடு வாழ்கிற வாழ்வு மிகுந்த தேவ பக்தியாய் இருக்கும். அது ஆதாயமுள்ள தேவபக்தியாய் இருக்கும்.

இரண்டாவது காரியம், அதிகாரம் மற்றும் மதிப்பின் மீது, கவுரவத்தின் மீது கொள்கின்ற மோகத்தின் மீது வெற்றிபெற வேண்டும். மூன்றாவது வேசித்தனத்தின்

மீது வெற்றிபெற வேண்டும். இன்னும் அநேக காரியங்களை வருகிற வகுப்பில் சிந்திக்க இருக்கின்றோம். எவற்றிலெல்லாம் நாம் வெற்றிபெற்று வாழ வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்று வேதம் சொல்கிற அநேக காரியங்கள் இருக்கின்றன. ஆனால் மிகமிக முக்கியமான காரியங்களை குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் உலகில் மாம்சத்தோடுதான் வாழ்கிறோம். உண்மைதான். ஆனால் அதே வேளையில் நாம் மாம்சீகத்தில் வாழ்ந்தாலும் ஆவிக்குரிய வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆவிக்குரிய வாழ்வில் வெற்றிபெற்றால் மாம்சத்தின்மீது ஜெயம்பெற்று வாழமுடியும். எனவே முதலாவது மறுரூபப்பட வேண்டிய இடம் ஆவிக்குரிய வாழ்வு. சிந்தையில்தான் பாவம் பிறக்கிறது. மனதில் பாவம் பிறந்த பிறகுதான் சரீரம் அதைச் செய்கிறதாய் மாறுகிறது. சிந்தையில் மாற்றம், நிகழ்வதற்குத்தான் கர்த்தர் சொல்லுகிறார், எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் என்று நீதிமொழிகளில் வாசித்துப் பார்க்கிறோம். எல்லாக் காவலும், முழு காவலும் இருதயத்திற்குப் போடவேண்டும். அங்கிருந்துதான் ஜீவ நீரூற்று புறப்பட்டு வருகிறது. அங்கே இருந்துதான், வாழ்வின் மையப்பகுதி வருகிறதினால் சரீரம் முழுவதும் அங்கிருந்துதான் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே அங்கே மாற்றம் நிகழவேண்டும். அதனால்தான் கர்த்தர் சொல்கிறார், மனம் திரும்புங்கள் என்று மனதைப் பற்றி பேசினார். மனதை முக்கியப்படுத்துகிறார். மனம் திரும்பிவிட்டால் சரீரம் தானாய் திரும்பிவிடும். தேவன் பிடிக்கவேண்டிய இடத்தைப் பிடித்துதான் மனம் திரும்பு, பரலோக ராஜ்ஜியம் சமீபமாய் இருக்கிறது. ஏனென்றால் உன் மனது, ஆவி ஆத்துமா தான் அந்த பரலோக ராஜ்ஜியத்தை சுதந்தரிக்கபோகுது. ஆகவே மனம் திரும்பு என்று கர்த்தர் சொல்கிறார்.

வருகிற நிகழ்ச்சியிலும் நாம் சிந்தித்து அநேக காரியங்களை நம்முடைய வாழ்விலே கைக்கொள்ள போகின்றோம். கர்த்தர் அதற்கு உதவுவார். அதற்கு உதவுமுன்னர், நம்மிடத்தில் எதிர்பார்க்கிற விஷயம் நீங்கள் அதற்கு ஒப்புக்கொடுங்கள். எல்லாக் காவலோடும் உங்கள் மனதை, இருதயத்தை காத்துக்கொள்ள உங்களை பலப்படுத்துங்கள். ஏனெனில் இராணுவத்தில் பார்த்தால், முன் இடத்தில் சில முக்கியமான இடங்கள் இருக்கிறது.

இராணுவத்தில் எல்லா இடத்திலும் ஆபத்து இல்லை. சில முக்கியமான இடங்களில் தான் எதிராளியின் தாக்குதல் அதிகமாயிருக்கும். அதனால் என்ன செய்வார்கள், மிகமிக முக்கியமான நுட்பமான பகுதிகளில் எதிராளிகள் அதிகமாய் வரக்கூடிய இடத்தில் தாக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிற இடத்தில் மிகவும் பலசாலிகளைக்கொண்டு நிறுத்துவார்கள். இல்லாவிட்டால் அங்கே அதிகமான பாதுகாப்பை போட்டு மற்ற இடங்களில் கொஞ்சம் ஆட்களை விட்டு அந்த யுத்தத்தை நடத்துவார்கள்.

ஏனெனில் இந்த இடத்தில்தான் எதிராளிகள் அதிகம் வருவார்கள் என்று அந்த தலைவன் முடிவுசெய்து, சரியாக அந்த பகுதியில் அதிகமான பாதுகாப்பை கொடுப்பான். எனவே, இங்கே அதைத்தான் வேதத்திலிருந்து குறிப்பெடுத்து உங்களுக்கு காண்பித்தேன். இந்த பகுதிகளிலெல்லாம் எதிராளி தாக்குகிற இடமாய் இருக்கிறது. எதிராளி அதிகமாய் ஊடுருவுகிற இடம் இதுதான். பணவிஷயத்தில் உங்கள் வாழ்வில் தலையிடுவான். அதில் உங்களை தோற்கடிப்பது மிகவும் எளிது. ஆகவே அங்கே உங்களைத் தாக்குவான் என்று நான் கூறினேன். இல்லாவிட்டால் அதிகாரம், மதிப்பாக இருக்கவேண்டும் என்ற மோகம், அந்த இடத்தில் எதிராளி அதிகமாய் ஆவிக்குரிய வாழ்வில் உள்ளவர்களை தாக்குகிறான்.

மூன்றாவது சொன்னேன், வேசித்தனம், இஸ்ரவேல் ஜனங்களை வீழ்த்துவதற்கு பெண்களைப் பயன்படுத்தினான் என்று நாம் பார்க்கிறோம். நம்முடைய வாழ்விலும்கூட அவ்விதமாக இந்த பகுதிகளில் அவன் அதிகமாய் ஈடுபட்டு தாக்க, வீழ்த்த, தோல்வியுள்ள வாழ்வை நடத்த இதைப் பயன்படுத்த அவன் விரும்புகிறான். எனவே இந்த இடத்தை பலப்படுத்துங்கள் என்று சொல்கிறேன். இந்த குறிப்பிட்ட மூன்று இடங்களை பலப்படுத்தி எல்லா காவலையும் அதிகமாய் வையுங்கள். மிக கவனமாய் இதைக் கவனியுங்கள். எவைகளெல்லாம் வேசித்தனம் என்று கண்டுபிடியுங்கள். சிலரைப் பார்த்தால், நேரடியாக தப்பு செய்யாமல் இருக்கலாம். ஆனால் பேச்சில, அசிங்கமாக இருக்கும். இவரெல்லாம் ஒரு ஊழியரா என்ற அளவிற்கு அசிங்கமான பேச்சுகள், மற்றவர்களை தாக்கும் வண்ணம் வேசித்தனத்தை தூண்டுவது, பேசுவது, இல்லாவிட்டால் ஊழியர்கள் பேசினாலே, அதில் அதிகார மோகம் இருக்கிறதைப் பார்க்க முடிகிறது. அவர் அதை விரும்புகிறார் என்று நமக்கு தோன்றுகிறது.

நானெல்லாம் ஊழியம் செய்தால் அப்படியொரு வல்லமை விளங்கவேண்டும். கைவைத்தால் அப்படி பிசாசு ஓடிவிடவேண்டும். நான் வரும்பொழுது அங்கங்கே எல்லாரும் விழவேண்டும். இது மறைமுகமாக அதிகார மோகத்தைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

பிரியமானவர்களே, வல்லமையான ஊழியம் செய்யவேண்டும், உண்மைதான், ஆனால் அதையே ஏன் இப்படி எதிர்பார்த்து சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். வந்தா பிசாசு ஓடட்டும் நல்லது, உங்களைப் பார்த்தால் பிசாசு நடுங்கி ஓடட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை, அதை ஏன் மனதில் விரும்புகிறீர்கள். ஏனெனில் அது அதிகாரமோகம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நானெல்லாம் இப்படி சாதாரண ஊழியம் எல்லாம் செய்யமாட்டேன். செய்தால் அப்படி சூப்பரா செய்வேன். ஹெலிக்காப்டரில் அப்படியே மேடை பக்கத்திலே வந்து இறங்கி சாதாரண ஊழியமில்லை, பெரிய ஊழியம் செய்வேன் என்று சொல்வது பெருமைக் குறிக்கிறது. அதிகாரத்தைக் குறிக்கிறது. உங்களுக்கு மிகப்பெரிய மதிப்பைப் பெற வேண்டுமென்ற விருப்பத்தைக் குறிக்கிறது. இவற்றையெல்லாம் உணர்ந்து செயல்பட கர்த்தர் எதிர்பார்க்கின்றார். தொடர்ந்து நாம் சிந்திக்க இருக்கின்றோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்!

**<u>கேள்விகள்:</u>**

1. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ, தேவனோடு ஒப்புரவாக வேண்டியதின் அவசியம் என்ன என்பதனைக் கூறுக?
2. வாழ்வை தேவனுக்கு சரணடைய வைத்துவிடுவது எவ்வாறு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ உதவியாக இருக்கின்றது என்பதனைக் கூறுக?
3. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ, பரிசுத்த ஆவியானவரின் கட்டுபாட்டிற்குள் வாழ்வை ஒப்புக்கொடுக்க வேண்டியதின் அவசியத்தைக் கூறுக?
4. வளரவேண்டும் என்று விரும்புவது எவ்வாறு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு முக்கியமானதாக இருக்கின்றது என்பதனைக் கூறுக?
5. பண ஆசையின் மேல் வெற்றிகொள்ள வேண்டியதின் அவசியத்தைக் கூறுக?

6. அதிகாரம் மற்றும் மதிப்பை விரும்புவதின்மேல் வெற்றிகொள்ள வேண்டியதின் அவசியத்தைக் கூறுக?
7. வெற்றியுள்ள வாழ்வு வாழ தடையாக பிசாசு கொண்டுவருகிற மூன்று பிரதானமான சோதனைகளை கூறுக?
8. இச்சை மற்றும் வேசித்தனத்தின் மீது வெற்றிபெறுவது, எவ்வாறு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ பயனுள்ளதாய் இருக்கிறது என்பதனை விளக்கமாக கூறுக?